மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், வடகுமரை ஊராட்சியில் வடகுமரை 1, வடகுமரை 2 என இரண்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில், வடகுமரை 1 மையம் அரசு கட்டடத்திலும், வடகுமரை 2 மையம் வாடகைக் கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. வடகுமரை 2 மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 369, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

369—

மகளிர் கலைக் கல்லூரி

***5725—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் அரசுக் கல்லூரி ஒன்றும், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி மூன்றும், சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் பதினான்கும் ஆக மொத்தம்

2013 மே 2]

18 கல்லூரிகள் இருக்கின்றன. பெண்ணாகரம் பகுதி, தித்தியோப்பஹள்ளி கிராமத்தில் ஏற்கெனவே ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, மகளிர் அந்தக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வருகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், இந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டு பெண்கள் கல்லூரிகளை வழங்கியிருக்கிறார்கள். அதிலே, ஒரு கல்லூரியை தருமபுரி மாவட்டம், காரிமங்கலத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, பெண்ணாகரம் பகுதி என்று பார்க்காமல், தருமபுரி மாவட்டம் என்று பார்த்து, மகளிர் கல்லூரியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தருமபுரி மாவட்டத்தினுடைய நிலையை நன்கு அறிவார்கள். தருமபுரி மாவட்டம், கல்வி வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது. குறிப்பாக, பெண்கள் கல்வியில், தருமபுரி மாவட்டம் கடைசி மாவட்டமாக உள்ளது. பின்தங்கிய பெண்ணாகரம் பகுதியில், கல்வி நிறுவனங்களோ, தனியார் கல்லூரிகளோகூட இல்லை. இத்தகைய நிலையைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, பெண்ணாகரத்தில், அரசு மகளிர் கல்லூரி அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், கல்வியிலே பின்தங்கிய மாவட்டம் என்பதை நானும் அறிவேன். நீங்களும் அறிவீர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் அறிவார்கள். தருமபுரி மாவட்டத்தை கல்வியில் உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற

நோக்கத்தோடுதான், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற பின்பு, பாப்பிரெட்டிப்பட்டியிலே ஒரு கலைக் கல்லூரியும், அரூரிலே ஒரு கலைக் கல்லூரியும், காரிமங்கலத்தில் பெண்களுக்கென ஒரு கல்லூரியும், அதோடு மட்டுமல்லாமல், நான்கு பொறியியல் கல்லூரிகளும் வழங்கியிருக்கிறார்கள். அதிலே ஒரு கல்லூரியை தருமபுரிக்கு வழங்கி பெருமை சேர்த்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பின்தங்கிய தருமபுரி மாவட்டத்தை முன்னேறிய மாவட்டமாக உருவாக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடுதான், ஆட்சி அமைத்த இரண்டே ஆண்டுகளில் நான்கு கல்லூரிகளை அந்த மாவட்டத்திற்குத் தந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பெண்ணாகரம் வட்டத்தில் இருபாலரும் பயிலக்கூடிய ஒரு கல்லூரி தொடங்கப்பட்டிருந்தாலும், அது பெண்ணாகரம் பகுதியிலிருந்து தொலை தூரத்தில் அமைந்திருக்கின்ற காரணத்தினாலே, மாணவியர் அங்கு சென்று படிப்பதற்கு வசதியில்லாமல் உள்ளது. அதனால் பெண்ணாகரம் பகுதியிலிருந்தும், தருமபுரி பகுதியிலிருந்தும் ஏராளமான மாணவியர் திருச்செங்கோடு, ஈரோடு, நாமக்கல் போன்ற வெளி மாவட்டங்களுக்குச் சென்று படிக்கக்கூடிய நிலை உள்ளது. வசதி குறைந்த மாணவியர் அங்கு சென்று படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. தருமபுரி மாவட்டத் தலைநகர் தருமபுரியில் ஒரு மகளிர் கல்லூரிகூட அமைக்கப்படாமல் உள்ள நிலை தொடர்கிறது. காரிமங்கலத்தில் ஒரு மகளிர் கல்லூரி தமிழக அரசால் அமைக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறோம். அதற்கு

2013 மே 2]

நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அந்தப் பகுதி ஓர் ஓரப் பகுதியாக இருக்கிறது.

கிருஷ்ணகிரியின் ஒரு பகுதி மற்றும் காரிமங்கலம் வட்டத்திலுள்ள மாணவ, மாணவியர் மட்டுமே அங்கு சென்று படிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, தருமபுரியில் ஓர் அரசு மகளிர் கல்லூரி அமைப்பது என்பது அவசியமாகிறது. அதுபோல், பெண்ணாகரம் ஒரு பெரிய வட்டமாகும். தமிழக அரசு, அண்மையில் அதனை இரு ஒன்றியங்களாகப் பிரித்து, ஏரியூரை மையமாக வைத்து, ஓர் ஒன்றியத்தினைத் துவக்கியதற்கு நாங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அந்த பரந்த பகுதியில் இருக்கக்கூடிய பின்தங்கிய ஏழை மாணவர்கள் பயில்வதற்கு வாய்ப்பாக பெண்ணாகரத்திலும், தருமபுரியிலும் மகளிர் கல்லூரி அமைக்க எதிர்காலத்திலாவது அரசு பரிசீலனை செய்யுமா என்பதையும், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது காரிமங்கலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள கல்லூரி ஓரப் பகுதியில் இருக்கிறது என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். போக்குவரத்து வசதியோ, பொருளாதார வசதியோ, சாலை வசதியோ இல்லாமல் இருக்கக்கூடிய கிராமப் பகுதிகளில் உள்ள மாணவ, மாணவியர் உயர் கல்வி பெறவேண்டும் என்ற நோக்கத்தோடுதான், நீங்கள் சொன்னதைப்போல, ஓரப் பகுதியில் இருக்கக்கூடிய காரிமங்கலத்திற்கு இதுபோன்ற வசதி செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரிமங்கலத்தினையும் சேர்த்து, தமிழ்நாட்டில் 651 கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. பெண்களுக்கென 19 கல்லூரிகள் ஏற்கெனவே இருந்தன. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு பெண்களுக்கென மேலும் 2 கல்லூரிகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆக, பெண்களுக்கென நிறைய கல்லூரிகள் இருக்கக்கூடிய மாநிலம் தமிழ்நாடு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், எங்கெங்கு இருபாலர் அரசுக் கல்லூரிகள் இருக்கின்றனவோ, அங்கு 33 சதவீத அடிப்படையிலும் மாணவியர் சேர்ந்து படிக்க வருகிறார்கள். பொதுவாக பெண்கள் இந்தக் காலத்திலே கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்ந்து படித்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய அளவில் எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டில் மட்டும் இன்றைக்கு 8,603 கல்லூரிகள் உள்ளன. மக்கள் தொகை அடிப்படையில், தமிழ்நாடு 7-வது இடத்தில் இருக்கிறது. ஆனால், கல்லூரிகளினுடைய எண்ணிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு 5-வது இடத்தில் இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு மக்கள் தொகை அடிப்படையில், ஆந்திரா முதலிடத்தில் உள்ளது. உத்தரப்பிரதேசத்தில் 18 கோடி பேர் இருக்கிறார்கள். இருப்பினும், கல்லூரிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், அது நான்காவது இடத்தில்தான் இருக்கின்றது. உத்தரப்பிரதேச மாநிலத்தில் 1,028 கல்லூரிகள் உள்ளன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மக்கள் தொகையில் 7-வது இடத்தில் இருந்தாலும், உயர் கல்வித் துறையில், கல்லூரிகளின் எண்ணிக்கையில், 651 கல்லூரிகளைப் பெற்று, ஐந்தாவது இடத்தில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 370, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

370—

நீர்வடிப் பகுதி பசுமைத் திட்டம்

***21031—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, பூங்குளம் ஊராட்சியில் நீர்வடிப் பகுதி பசுமைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?